சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 27.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **32/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | பாஸ்கரன் |
| தந்தை பெயர் | : | சின்னையன் |
| கிராமம் | : | செம்மங்குடி |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 65 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.R.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் எத்தனை வருடங்களாக செம்மங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் எனது பூர்வீகம் அந்த கிராமம் தான். நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன்

என்றால் சரிதான். எனக்கு அந்த கிராமத்தில் சொந்த முறையிலோ அல்லது குத்தகை முறையிலோ விவசாய நிலங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் விவசாயமும் செய்யவில்லை. எனக்கு அந்த கிராமத்தில் உள்ள நில அமைப்புகள் நன்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். புதுத்தெரு என்பது எதிரியின் வீட்டுடன் முடிவடைந்து விடுகிறது என்று சொன்னால் சரிதான். அந்த ரோட்டின் முடிவில் உள்ள வயலில் ஆடு, மாடுகள் சென்றுவிட கூடாது என்பதற்காக இரும்பு வேலி வைத்து தடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதை தாண்டி மனிதர்களும் செல்லமுடியாது என்றால் சரிதான். அந்த ரோடு எதிரியின் வீட்டுடன் முடிவடைந்து விட்ட காரணத்தினால் ரோட்டின் நடுவே EB போஸ்ட் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு நேர் எதிர் திசையில் அ.சா-1 சுந்தர்ராஜ் வீடு உள்ளது என்றால் சரிதான். சுந்தர்ராஜ் வீட்டிற்கு செல்லும் EB லைன் எந்நிலையிலும் எதிரியின் வீட்டிற்கு இடையூராக இல்லை என்றால் இரண்டு வீடுகளும் எதிர் எதிர் திசையில் உள்ளதால் இருவருக்கும் இடையூரு இல்லை. எதிரியின் வீடு கூரை வீடு தான் அந்த வீட்டில் நாளது தேதி வரை எந்த ஒரு மராமத்து பணிகளும், கட்டுமான பணிகளும் நடைபெறவில்லை என்றால் சரிதான். அ.சா-1 சுந்தர்ராஜ் செம்மங்குடி குடியான தெருவில் செல்வராஜ் வீட்டில் தான் தங்கியுள்ளார் என்றும், புது தெருவில் உள்ள வீட்டில் வசிக்கவில்லை என்றாலும் சரிதான். அந்த வீடு குடியிருக்க முடியாத அளவுக்கு பழுதடைந்த வீடு. நான் எதற்கு புது தெருவிற்கு சென்றேன் என்றால். முனுசாமி எங்கள் ஊர் ஊராட்சி மன்ற தலைவர் அவர் ஏதோ பிரச்சனை போய் பாருங்கள் என்றார் நான் போய் பார்த்தேன். புகார் எங்கு தயார் செய்யப்பட்டு என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் என்னை விசாரணை செய்யவில்லை. எதிரிக்கும், ஊராட்சி மன்ற தலைவர் செந்தமிழ்செல்வி மற்றும் அவரது கணவர் முனுசாமிக்கும் பிரச்சனை என்றால் எதிரி கணக்கு வழக்கு கேட்பார் அதனால் மன கசப்பு

இருந்தது. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், முனுசாமி எனக்கு வேண்டியவர் என்பதால் அவரது தூண்டுதலின் பேரில் அ.சா-1 சுந்தர்ராஜ் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக முனுசாமி என்னை சாட்சியம் அளிக்க கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.27 17:36:06 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.